# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### கர்நாடக சங்கீதம்

Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office

சுட்டெண் ..................................................... **தரம்: 09** **நேரம் - 2.00 மணித்தியாலம்**

பகுதி I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) ஸப்த தாளங்களின் எண்ணிக்கை
   1) 5 2) 6 3) 7 4) 8

2) ஒரு கதையை பாட்டுக்கள் மூலம் விளக்கும் நாடக வகை?
   1) வில்லுப்பாட்டு 2) கூத்து
   3) இசை நாடகம் 4) நாடகம்

3) வைதீக கானத்தைச் சேர்ந்த உருப்படி?
   1) கீர்த்தனை 2) பதம் 3) கீதம் 4) ஜாவளி

4) 15வது மேளகர்த்தா இராகம்
   1) மோகனம் 2) ஆரபி 3) பிலஹரி 4) மாயாமாளவகௌளை

5) ஜனக இராகங்களின் மொத்த எண்ணிக்கை?
   1) 65 2) 72 3) 28 4) 25

6) சங்கீத பிதாமஹர் எனப்படுபவர்?
   1) முத்துஸ்வாமி தீட்சிதர் 2) புரந்தரதாசர்
   3) சியாமா சாஸ்திரி 4) தியாகராயர்

7) ஒரு அலங்காரம் எடுத்துக் கொள்ளும் ஆவர்த்தனம்?
   1) 5 2) 8 3) 10 4) 7

8) சாமி நாதா எனும் கீதம் அமைந்த இராகம்?
   1) சுத்தசாவேரி 2) பிலஹரி 3) ஆரபி 4) மோகனம்

9) ஜதிக் கோர்வைகளை ஆதாரமாக கொண்ட உருப்படி?
   1) கீர்த்தனை 2) வர்ணம் 3) பதம் 4) ஜதீஸ்வரம்

10) தாயினும் நல்ல எனும் தேவாரம் பாடப்பட்ட தலம்?
   1) திருக்கேதீச்சரம் 2) திருகோணமலை
   3) திருபிரமபுரம் 4) திருவீழிமிழலை

11) ஹிந்துஸ்தானி இசையில் பைரவதாட் எனப்படும் இராகம்?
   1) ஆரபி 2) மோகனம் 3) மாயாமாளவகௌளை 4) பிலஹரி

12) ஜனக இராகத்தில் இருந்து பிறந்த இராகம்?

1) பாஷாங்க இராகம் 2) வர்ஜ இராகம்
3) ஜன்னிய இராகம் 4) கர்த்தா இராகம்

13) கும்மிப் பாடல்களுக்கு புத்துயிர் அளித்தவர்?

1) சுப்பிரமணிய பாரதியார் 2) தியாகராஜன்
3) பாபநாசம்சிவன் 4) கோபாலகிருஷ்ண பாரதியார்

14) திஸ்ர திரிபுடை தாளத்தின் அங்கக் குறியீடு

1) $I_3 O O$ 2) $I_4 O O$ 3) $I_5 O O$ 4) $I_7 O O$

15) தேவ தேவ எனும் கீர்த்தனையை இயற்றியவர்?

1) தியாகராஜர் 2) ஸ்வாதிதிருநாள் மகாராஜா
3) பாபநாசம் சிவன் 4) முத்துத்தாண்டவர்

16) திருப்புகழை அருளியவர்?

1) திருஞானசம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) அருணகிரிநாதர்

17) சந்தனத்தையே அரைத்து எனும் பாடல் வகை?

1) காவடிச்சிந்து 2) நாட்டார் பாடல் 3) பக்திப்பாடல் 4) மெல்லிசைப்பாடல்

18) பண் பழம்பஞ்சுரம் எனப்படும் இராகம்?

1) பிலஹரி 2) சங்கராபரணம் 3) ஆரபி 4) மோகனம்

19) ஜன்னிய இராகத்திற்கு உதாரணம்?

1) மாயாமாளவகௌளை 2) சங்கராபரணம்
3) மோகனம் 4) கல்யாணி

20) ஆலயங்களில் அதிகாலை வேளையில் பாடப்படுவது?

1) திருவாசகம் 2) திருப்புகழ் 3) திருப்பள்ளியெழுச்சி 4) திருவிசைப்பா

( 20× 2 = 40 புள்ளிகள் )

## பகுதி - II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) அ) 29வது மேளகர்த்தா இராகம்?

ஆ) ஐரோப்பிய இசையில் மேஜர்ஸ்கேஸ் எனப்படும் இராகம்?

இ) இவ்விராகம் பற்றிய விரிவான இலட்சணம் தருக?

**(1 + 2 +12 = 15 புள்ளிகள்)**

02) அ) ஜனக இராகம் என்றால் என்ன?

ஆ) ஜன்னிய இராகம் என்றால் என்ன?

இ) ஜனக இராகத்தின் மொத்த எண்ணிக்கை யாது?

ஈ) ஜன்னிய இராகப் பிரிவுகள் எவை?

**(15 புள்ளிகள்)**

03) கும்மி கோலாட்டம் முதலான பாடல்களின் கலாச்சாரப் பின்னணியை சுருக்கமாக விளக்குக?

**(15 புள்ளிகள்)**

04) புரந்தரதாசரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டையும் விளக்குக?

**(15 புள்ளிகள்)**